අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/1/2/5

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.04.29

***சுற்றுநிருப இலக்கம்: 15 / 2024***

அனைத்து மாகாணப் பிரதம செயலாளர்கள்,

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்துக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து அதிபர்களுக்கு,

***அகில இலங்கை பாடசாலை பரத நாட்டியப் போட்டிகள் - 2024***

கல்வி அமைச்சினால் வருடாந்தம் நடாத்தப்படும் மேற்படி போட்டியின் 2024 வருடத்திற்குரியதாக இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், ஆலோசனைகள் மற்றும் ஆக்கங்களை முன்னிலைப்படுத்தவேண்டிய போட்டிப் பிரிவு தொடர்பாக தங்களது கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

02. இவ் விடயம் தொடர்பாக உரிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அறியப்படுத்தி இப் போட்டியில் அவர்களது ஆக்கங்களை முன்னிலைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் கோருகின்றேன்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர
**செயலாளர்**


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

**அறிமுகம்.**

கல்வி அமைச்சினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற பரத நாட்டிய பாடம் தொடர்பான போட்டி அனுபவங்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஈடுபடுத்தி, அவர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்து ஆக்க பூர்வமான செயற்பாடுகளை விருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இப்போட்டியானது ஒழுங்கு செய்யப்படுகின்றது. பாடசாலைகளில் பரத நாட்டியம் தரம் 6 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை பாட விதானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் மாணவர்களுக்குப் பரத நாட்டிய பாடம் பற்றிய பிரயோக மற்றும் இணைபாட அனுபவத்தினைப் பெற்றுக் கொடுப்பதனூடாக, ஆளுமை விருத்திக்கு வழியமைக்கின்றது. ஆசிரியர்கள், மாணவர்களின் ஆளுமை விருத்தியை நோக்காகக் கொண்டு இடம்பெறும் இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு உயர்கல்வியில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

**போட்டியின் நோக்கம்**

நடன பாடம் மற்றும் கலை தொடர்பான இரசனையை விருத்தி செய்வதும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பாடசாலைச் சமூகத்தின் ஆக்கத் திறனை அதிகரிப்பதும், நாட்டியக் கலையிலுள்ள பல்வேறு பரீட்சிப்புக்களையும், ஆற்றுகைப்படுத்தல்களையும் மேற்கொண்டு மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதும், உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்குவதுடன் நடனக் கல்வியின் தரத்தினை அதிகரிப்பதும் இப்போட்டிகளின் நோக்கமாகும்.

## போட்டிக்கான பொது ஒழுங்கு விதிகள்

**01. போட்டி நியதிகள்**

1.1 பங்குபற்றும் போட்டியாளர்களின் பிரதான 4 பிரிவுகள்.

1. கீழ்ப் பிரிவு - தரம் 6 - 8
2. சிரேஷ்ட பிரிவு 1 - தரம் 9 - 11
3. சிரேஷ்ட பிரிவு 2 - தரம் 12 - 13
4. திறந்த பிரிவு - தரம் 9 – 13

1.2 போட்டிகள் பின்வரும் உப பிரிவுகளாக அமையும்.

1. தனி நடனம் ஆண் செந்நெறி
2. குழு நடனம் ஆண் கிராமியம்
3. தனி நடனம் பெண் செந்நெறி
4. குழு நடனம் பெண் செந்நெறி
5. குழு நடனம் பெண் கிராமியம்
6. கலப்பு நடனம் செந்நெறி
7. கலப்பு நடனம் கிராமியம்
8. திறந்த போட்டிப் பிரிவு – நாட்டிய நாடகம்

**2.0 போட்டிச் சந்தர்ப்பங்கள்**

**2.1 பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போட்டிக்கான வகைகள் பின்வருமாறு அமையும்.**

1. மாணவர் தொகை 300 ற்குக் குறைவான பாடசாலைகள் - **C வகைப் பாடசாலை**

2. மாணவர் தொகை 301-1000 – **B வகைப் பாடசாலை**
3. மாணவர் தொகை 1001 - அதற்கு மேல் - **A வகைப் பாடசாலை**

அரச பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

### 2.2 பாடலிசைப்போர்

கல்வி அமைச்சினது செயலாளரின்/ மாகாணக் கல்விச் செயலாளரின்/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின்/ வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் ஒரு பாடசாலைக்கு அது அமைந்துள்ள மாகாணத்திலுள்ள வேறு பாடசாலை ஒன்றின் ஆசிரியரையோ அல்லது மாணவர்களையோ பாடல் இசைப்போராகப் பயன்படுத்த முடியும். **இசை ஆசிரியர் இல்லாத பாடசாலைகள் மாத்திரம்** மேற்குறிப்பட்ட நடைமுறையைப் பின்பற்றலாம். அரசினால் நியமிக்கப்பட்ட ஆசிரிய உதவியாளரும் பங்குபற்ற முடியும். நட்டுவாங்க ஆசிரியர் யதிகளைக் கொன்னுப்பிக்க முடியும். நட்டுவனாரும் பாடலிசைப்பாராயின் அவரும் ஒரு பாடகராகக் கருத்தில் கொள்ளப்படுவார்.

### 2.3 பக்கவாத்தியக் கலைஞர்கள்

கல்வி அமைச்சினது செயலாளரின்/ மாகாணக் கல்விச் செயலாளரின்/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின்/ வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன், ஒரு பாடசாலைக்கு எந்த மாகாணத்திலுள்ள மாணவராயினும் பக்கவாத்தியம் வாசிக்க முடியும்.

பாடலிசைப்போர் இருவர், பக்கவாத்தியக் கலைஞர்கள் இருவர் (தாள வாத்தியக் கருவி இசைப்பவர் ஒருவர், இசைக்குரிய கருவி இசைப்பவர் ஒருவர்), நட்டுவாங்க ஆசிரியருடன் 5 பேர் பங்குபற்றலாம். பக்கவாத்தியம் பாடசாலை **மாணவர்களால் மட்டுமே** இசைக்கப்பட வேண்டும்.

நாட்டிய நாடகத்திற்கு மேற்படி பக்கவாத்தியக் குழுவுடன் தேவையேற்படின் விசேடமான இசைக்கருவி ஒன்று மேலதிகமாகப் பயன்படுத்த முடியும். (உதாரணம் - ஓர்கன்)

**பரத நாட்டிய ஆசிரியர்** பாடசாலைகளில் இல்லாதவிடத்து மாத்திரம் பாடசாலை மாணவர்களோ அல்லது ஏனைய பாடசாலை நடன ஆசிரியரோ அல்லது பரத நாட்டியத்தில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த ஒருவரோ கல்வி அமைச்சினது செயலாளரின்/ மாகாணக் கல்விச் செயலாளரின்/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின்/ வலயக் கல்விப் பணிப்பாளரின்/ அனுமதியுடன் நட்டுவாங்கம் செய்ய முடியும்.

அரசின் அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றிற்கு அரச பாடசாலை ஒன்றின் மாணவரைப் பக்கவாத்தியத்திற்காகச் சேர்த்துக்கொள்ள முடியும். ஆயினும் அரச பாடசாலை ஒன்றிற்குத் தனியார் பாடசாலை மாணவரைச் சேர்த்துக் கொள்ள முடியாது. ஒரு நிகழ்ச்சிக்குப் பக்கவாத்தியம் வாசிக்கும் மாணவர் ஒருவர் அதே நிகழ்ச்சியில் பாடலும் இசைப்பாராயின் பக்கவாத்தியக் குழுவில் அந்நபர் இருவராகக் (பாடல் இசைப்போர்+வாத்தியக் கலைஞர்) கணக்கில் கொள்ளப்படுவார்.

பல்கலைக் கழக மாணவர்கள் தவிர்ந்த தரம் 6 – 13 வரையான மாணவர்கள் பக்கவாத்தியம் வாசிக்க முடியும். **பக்கவாத்தியங்களிற்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**2.4** இப்போட்டிக்கு ஒரு பாடசாலையின் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை கற்கும் மாணவர்கள் பங்குபற்ற முடிவதோடு அப்பாடசாலை மூலம் இரண்டாம் முறையாகச் சாதாரண

தரம், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பங்குபற்றலாம். ஆனால் பாடசாலை மூலம் இரண்டாம் முறையாகச் சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பரீட்சைப் பெறுபேறுகள் வந்துவிட்ட பின்னர், வலயத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தால் அவர்கள் பங்குபற்ற முடியாது. இருப்பினும் போட்டிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பெறுபேறுகள் வந்தால், அவர்கள் தொடர்ந்தும் போட்டியில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற ஒருவர் அடுத்த வருடம் அதே போட்டியில் பங்குபற்ற முடியாது. ஆனால் அதற்கடுத்த வருடம் பங்குபற்ற முடியும். ஒரு மாணவனோ, மாணவியோ ஒரு தனி நிகழ்ச்சியிலும், ஒரு குழு நிகழ்ச்சியிலும் மாத்திரம் பங்குபற்ற முடியும்.

**2.5** ஒரு பாடசாலை 3 நிகழ்ச்சிகளில் மாத்திரமே பங்குபற்ற முடியும். மேற்குறிப்பிட்ட A,B,C வகையில் அடங்கும் பாடசாலைகளுக்கான போட்டிகள் அனைத்தும் தனித்தனிப் பிரிவுகளாக நடைபெறும். **இருப்பினும் இந்த 3 போட்டிகளுடன் நாட்டிய நாடகம் மேலதிக ஒன்றாகக் கருத்திற் கொள்ளப்படும்.** அதாவது நாட்டிய நாடகப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் மாத்திரம் 4 போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

உதாரணமாகக் கீழ்ப் பிரிவு ஆண் தனிப் போட்டிப் பாரதியார் பாடல், A வகைப் பாடசாலைகளுக்குத் தனியாகவும், B வகைப் பாடசாலைகளுக்குத் தனியாகவும், C வகைப் பாடசாலைகளுக்குத் தனியாகவும் இடம்பெறும்.

**2.6 குழுப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை**

C வகைப் பாடசாலை - 6 மாணவர்கள்

B வகைப் பாடசாலை – 8 மாணவர்கள்

A வகைப் பாடசாலை - 12 மாணவர்கள்

நாட்டிய நாடகம் 15 - 20 மாணவர்கள்

கலப்புப் பிரிவு – 2:1 என்கின்ற விகிதத்தில் மாணவர்கள் பங்குபற்ற வேண்டும்.

**ஆண் - குழுப்போட்டிகளில் மாத்திரம்**

C வகைப் பாடசாலை – 4 - 6 மாணவர்கள்

B வகைப் பாடசாலை – 6 - 8 மாணவர்கள்

A வகைப் பாடசாலை –8 - 12 மாணவர்கள் வரை பங்குபற்ற முடியும்.

**2.7** இப்போட்டிகளுக்காகத் தயார்ப்படுத்தப்படுகின்ற பாடல்கள் இன, மத பேதங்களுக்கோ, அரசியல் சார்ந்த கருத்துக்களுக்கோ வித்திடாதவையாகவும் பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமானவையாகவும் இருத்தல் வேண்டும். பாடல்கள், எழுத்துருக்கள் போன்றவற்றைப் போட்டியின் இரண்டு நாட்களுக்கு முன்பு நடுவர்களுக்கு வழங்குவதற்காகப் போட்டியின் பிரதான அமைப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**2.8** கோட்ட, வலய மற்றும் மாகாணப் போட்டிகளின்போது சிறுவர்களாயின் பாடசாலை சீருடைக்குத் தாவணி, பிஜாமாவும் வயது வந்த மாணவிகளாயின் நடனத்திற்கான பயிற்சி

உடையுடன்(பயிற்சிச் சேலை) கலந்துகொள்ளல் வேண்டும். உடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. முக ஒப்பனை, தோடு, ஜிமிக்கி, தலையில் பூ வைப்பதற்கு மாத்திரம் அனுமதி உண்டு. வேறு உடை அலங்காரங்களுடன் பங்குபற்றுபவர்கள் போட்டி விதிமுறையை மீறியவர்களாகக் கருதப்பட்டு போட்டியிலிருந்து நிராகரிக்கப்படுவர். இவை நாட்டிய நாடகம் தவிர்ந்த ஏனைய போட்டிகளுக்குப் பொதுவானதாகும். தேசிய மட்டப் போட்டிகளின்போது மாத்திரம் நடனத்திற்கான உரிய உடை, ஒப்பனை அலங்காரங்களுடன் பங்குபற்றலாம். நாட்டிய நாடகத்திற்கு மாத்திரம் அனைத்து மட்டங்களிற்கும் உரிய, ஆடை, ஒப்பனை, அலங்காரங்களையும் பயன்படுத்த முடியும். இந்த ஆடை நிபந்தனை தொடர்பாகப் பாடசாலை அதிபர், பாடப் பொறுப்பான ஆசிரியர் அல்லது ஆசிரியர் குழுவினரே முழுப் பொறுப்பாளருமாவார்.

**2.9** போட்டிக்கான நேரசூசியில் உரிய கால எல்லைக்குள் பங்குபற்றாத, அறிவித்தல் எதுவும் வழங்காத போட்டியாளர்கள் அப்போட்டிக்குப் பங்குபற்றவில்லை எனக்கருதி முடிவுகள் வழங்கப்படும். தேசிய மட்டப் போட்டிக்குக் கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவம் போன்று போட்டி நடைபெறும் நிலையத்திலும் சமர்ப்பிக்க வேண்டும்.

போட்டியாளர் மேடைக்கு வந்த பின்னர், பக்கவாத்தியக்காரர்கள் சுருதி சேர்ப்பதற்கு இரண்டு நிமிடங்களுக்கு மேலதிகமாக எடுத்துக் கொள்ள முடியாது.

**2.10** கடந்த ஆண்டில் பங்குபற்றித் தேசிய நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் மீண்டும் அதே பிரிவில், அதே நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாது.

உதாரணமாகத் தரம் 10-11ஆம் வகுப்பில் ஆண் தனி செந்நெறி போட்டியில் பங்குபற்றியவர் மீண்டும் அதே நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாது. ஆனால் அதே வகுப்புப் பிரிவில் ஆண் கிராமியத்தில் பங்குபற்ற முடியும்.

**2.11** வலய, மாகாண, தேசிய மட்டங்களின்போது நாட்டிலே வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

## 03. பங்குபற்றுதலுக்கான வரையறைகள்

3.1 வலய மட்டப் போட்டியானது உரிய வலயக் கல்விப் பணிப்பாளர், அழகியற்துறைப் பணிப்பாளர்/ பாடத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப் பணிப்பாளர் அல்லது ஆசிரிய ஆலோசகரினால் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். வலயமட்டப் போட்டியின் அனைத்து பொறுப்புகளுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களே வகைகூற வேண்டும். அத்தோடு போட்டி விதி முறைகளை மீறாமல் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். போட்டி முடிவுகளைத் தீர்மானிப்பதில், சுற்று நிருப விதிகளில் முரண்பாடான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் கல்வி அமைச்சினால் பரத நாட்டியத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட அதிகாரியுடன் கலந்தாலோசித்துத் தீர்ப்புகளை வெளியிடுதல் கட்டாயமானது. போட்டி முஎவுகளில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டால் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்கும், முடிவுகளை மாற்றியமைப்பதற்குமான முழு அதிகாரமும் கல்வி அமைச்சின் அழகியற்துறைப் பணிப்பாளருக்கு உண்டு. வலய மட்டப் போட்டிகள் **30.06.2024**ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட்டு, மாகாண மட்டப் போட்டிகளை ஒழுங்கமைப்பதற்காக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3.2 மாகாணப் போட்டியானது உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் ஏற்பாடு செய்யப்படும். இச்செயற்பாட்டில் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர்/ பாடத்திற்குப் பொறுப்பான மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் உதவ வேண்டும். அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டும், கல்வி அமைச்சின் கல்விப்

பணிப்பாளரின் (அழகியல்) அனுமதியின்பேரில் இணைப்பாளர், நிகழ்சி ஒழுங்கமைப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவர். மாகாணப் போட்டியின் அனைத்துப் பொறுப்புகளும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்படுவதுடன், போட்டி விதிமுறைகளை மீறாமல் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். ஏதேனும் போட்டி முடிவுகளைத் தீர்மானிப்பதில், சுற்று நிருப விதிகளில் முரண்பாடான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் கல்வி அமைச்சினால் பரத நாட்டியத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட அதிகாரியுடன் கலந்தாலோசித்துத் தீர்ப்புகளை வெளியிடுதல் கட்டாயமானது. போட்டியில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டால் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்கும், மாற்றியமைப்பதற்குமான முழு அதிகாரமும் கல்வி அமைச்சின் அழகியற்துறைப் பணிப்பாளருக்கு உண்டு. மாகாண மட்டப் போட்டிகள் **30.08.2023** ஆம் திகதிக்கு முன்பதாக நடத்தப்பட வேண்டும். மற்றும் இறுதிப் போட்டிகளை ஏற்பாடு செய்வதற்காக, ஆவணங்கள் கல்வி அமைச்சின் அழகியல் கிளையின் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3.3 வலய மட்டப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களே மாகாண மட்டப் போட்டி நிகழ்ச்சிகளுக்கும், மாகாண மட்டப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களே, தேசிய மட்டப் போட்டி நிகழ்ச்சிகளுக்கும் பங்குபற்றுவது கட்டாயமானதாகும். முதலில் பங்கு பற்றிய நிகழ்ச்சியிலிருந்து ஏனைய மட்டங்களிற்குச் செல்லும்போது நிகழ்ச்சிகள் மாற்றப்படலாகாது. அவ்வாறு மாற்றப்பட்டிருப்பதாக அறியப்படுமிடத்து அந்நிகழ்ச்சி போட்டியிலிருந்து நீக்கப்படும். மாணவர்கள் பங்குபற்றல் தொடர்பான எதிர்பாராத சந்தர்ப்பங்களில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுமிடத்துக் குறிப்பிட்ட பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க வலய மட்டப் போட்டியின்போது வலயக் கல்விப் பணிப்பாளரிடமும், மாகாண மட்டப் போட்டியின்போது மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும், தேசிய மட்டப் போட்டியின்போது கல்வி அமைச்சின் அழகியல் கிளையின் கல்விப் பணிப்பாளரினூடாகவே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

3.4 வலய மட்டத்திலோ, மாகாண மட்டப் போட்டியிலோ பங்குபற்றாத பாடசாலை தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியமை குறித்து வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண அழகியற்துறைப் பணிப்பாளர், இணைப்பாளர் ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும். ஏதேனும் ஒரு போட்டிப் பிரிவில் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றாத எந்தப் பாடசாலைகளும் அடுத்த மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3.5 வலய மட்ட/ மாகாண மட்டப் போட்டிகளில் எக்காரணம் கொண்டும் சம இடங்கள் வழங்க முடியாது. ஒரு போட்டிப் பிரிவில் தேசிய போட்டிக்கு ஒரு மாகாணத்தில் இருந்து ஒரு பாடசாலை மட்டுமே தெரிவு செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான முழுமையான வகைகூறல் மாகாணக் கல்விப்பணிப்பாளரையே சாரும். தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படுவது மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட பாடசாலை மட்டுமாகும்.

3.6 குழு நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாக 2.6 இல் குறிப்பிட்டதற்கிணங்க போட்டி தொடங்கி முடியும் வரை நடுவர்களின் முன் தோன்றும் மாணவர்களே எண்ணிக்கைக்குள் உள்ளடக்கப்படுவர். ஒரு மாணவருக்குத் திடீரென பங்குபற்ற முடியாமல் போகும்நிலை ஏற்பட்டால், வலய/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் அவருடைய பெயர் போட்டி விண்ணப்பப் படிவத்திலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். வலயம், மாகாணம் தேசியப் போட்டிகளின்போது பங்குபற்றும் ஆசிரிய, மாணவர்கள் ஒழுங்கமைப்புக் குழுவின் முன்பாகக் கையெழுத்து இடுதல் வேண்டும்.

3.7 ஒவ்வொரு போட்டியாளரும் தங்களுடைய அடையாளங்களைப் பின்வருமாறு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

- பெயர் விபரம் அதிபரினால் உறுதிப்படுத்தப்படுதல் வலயப் போட்டிக்குப் போதுமானது. கீழ்ப் பிரிவிற்குரிய மாகாணப் போட்டிகளுக்கு அதிபரினால் பெயர் விபரமும், புகைப்படமும் உறுதிப்படுத்துப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். சிரேஷ்ட பிரிவிற்கு ஏதாவது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணம் அல்லது ஆள் அடையாள அட்டையுடன் பெயர் விபரமும் அதிபரினால் உறுதிப்படுத்துப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- இறுதிப் போட்டி நிகழ்ச்சிகளின்போது ஆள் அடையாளம் தொடர்பாகப் பிரச்சினை ஏற்படும்போது பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கீழ்ப் பிரிவு மாணவர்களின் புகைப்படம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்படுவதுடன், சிரேஷ்ட மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையினைச் சமர்ப்பிக்க வேண்டும். பங்குபற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் பெயர் விபரங்கள் அதிபரின் அலுவலக முத்திரையுடன் உறுதிப்படுத்தப்பட்டு அதனுடன் பிரதியும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.8 அந்தந்தப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் அதே போட்டித் தலைப்புக்களிலேயே தேசிய மட்டம் வரை பங்குபற்றுதல் கட்டாயமானது. குழுப் போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்குத் தவிர்க்க முடியாத பிரச்சினை ஏதும் ஏற்படின் பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் மாகாண மட்டத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும், தேசிய மட்டத்தில் கல்வியமைச்சின் அழகியல் பணிப்பாளரினதும் முன் அனுமதியுடன் (எழுத்து மூலம்) மட்டும் பிரச்சினை தீர்க்கப்படுதல் வேண்டும்.

3.9 தனி அல்லது குழுத் தலைப்பொன்றுக்குப் பங்குபற்றும் போட்டியாளர் சார்ந்த பாடசாலையொன்று, வலய அல்லது மாகாண மட்டத்தில் பங்குபற்றி வெற்றி பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் அப்போட்டியாளருக்கு அடுத்த கட்டப் போட்டி நடைபெறமுன் தாம் பங்குபற்றிய பாடசாலையிலிருந்து விலகி வேறு பாடசாலைக்குச் சேர வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது, அவருக்குத் தான் முதலாவதாக வலய மட்டப் போட்டிக்குப் பங்குபற்றிய பாடசாலை சார்பாகப் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். அப்போட்டியாளர்தான் புதிதாகச் சேர்ந்த பாடசாலையின் சார்பாகப் போட்டியிட முடிவது அடுத்த வருடத்திற்கான போட்டியிலிருந்தாகும்.

3.10 அந்தந்தப் பாடசாலை அதிபரின் அனுமதியுடன் மாத்திரமே போட்டி நிகழ்வுகளில் பங்குகொள்ள முடியும். அவ்வாறே பாடலுக்கோ பக்கவாத்திய உதவிக்கோ வேறு பாடசாலையொன்றிலிருந்து ஒருவரைச் சேர்த்துக் கொள்ளும்போதும் உரிய பாடசாலை அதிபரின் அனுமதி பெறுதல் கட்டாயமானது.

3.11 மாகாணப் போட்டி முடிவுகள் மிகத் தெளிவாகவும், சரியாகவும் தயாரிக்கப்பட்டுத் தலைப்பு ஒழுங்கில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை மட்டும் குறிப்பிட்டுப், பாடசாலைகளின் முகவரியினையும் சரியாகக் குறிப்பிட்டு அனுப்புவது அவசியமாகும். அதற்காகக் கல்வி அமைச்சிலிருந்து பின்னர் அனுப்பி வைக்கப்படும் மாதிரிப் படிவத்தை மட்டும் பயன்படுத்தல் வேண்டும்.

**04. நடுவர்கள் தெரிவு**

4.1 வலய மட்டப் போட்டிகளுக்கான நடுவர் குழாம் வலயக் கல்விப் பணிப்பாளரினூடாகவும், மாகாண மட்டப் போட்டிகளுக்கான நடுவர் குழாம் மாகாணக் கல்விப்பாளரினூடாகவும் மாகாண/ வலய பாடப் பணிப்பாளர்கள் அல்லது பரத

நாட்டிய ஆசிரிய ஆலோசகரின் பரிந்துரைப்படி நியமிக்க வேண்டும். இறுதிப் போட்டியின் நடுவர் குழாமைக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்படும் பரத நாட்டிய பாடப் பொறுப்பதிகாரியின் ஆலோசனையின்படியும் மற்றும் அழகியல் பிரிவுப் பணிப்பாளரின் அனுமதியின்படியும் தீர்மானிக்கப்படும். ஏதேனும் போட்டிப் பிரிவில் பாடத்துறை சார்ந்த இடர்பாடுகள் எழுமாயின், அது தொடர்பான தீர்மானம் கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் நடுவர் குழாமுடன் கலந்துரையாடி மேற்கொள்ளப்படும்.

4.2 வலய மட்ட,/ மாகாண மட்டப் போட்டிகளில் பொருத்தமான நடுவர்களைத் தெரிவு செய்வது வலயத்தின் அழகியல் பாட உ.க.ப / பி.க.ப மற்றும் அழகியல் பாட ஆசிரிய ஆலோசகர்களின் பொறுப்பாகும். முடிவுகள் பெற்றுக் கொடுக்கும்போது பாராபட்சமின்றிப், போட்டி விதிமுறைகள், நியதிகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நடுவர் குழாமிற்கு அறிவுறுத்தல் தொடர்பான விடயங்களை மேற்கொள்வது வலயத்தின் அழகியல் பாட உ.க.ப / பி.க.ப மற்றும் அழகில் பாட ஆசிரியர் ஆலோசகர்களின் பொறுப்பாகும். எக்காரணம் கொண்டும் மாணவர்களுக்கு அசாதாரண சூழ்நிலையை உருவாக்கி அவர்களை உளவியல் தாக்கத்திற்கு உட்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

4.3 சகல போட்டிகளும் நிறைவு செய்யுமிடத்து போட்டி முடிவுகளை வலய/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் பாதுகாப்பாக வைத்திருப்பது வலயத்தின் அழகியல் பாட உ.க.ப / பி.க.ப மற்றும் அழகியல் பாட ஆசிரிய ஆலோசகர்களின் பொறுப்பாகும். போட்டி முடிவுகள் தொடர்பான மீள் பரிசீலனை செய்யப்படின் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தல் அத்தியாவசியமானதாகும்.

4.4 போட்டி முடிவின்போது ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் குறைந்தது 33% பெறுபேற்றுப் புள்ளியினைப் பெறாவிடத்து அந்நிகழ்வு வெற்றியீட்டிய நிகழ்வாகக் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. ஏனைய மட்டங்களிற்குச் செல்வதற்கும் தகுதியற்றவையாகும்.

4.5 வலய, மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டி முடிவுகள் அன்றைய தினமே அறிவிக்கப்படும். ஏதேனும் சந்தர்ப்பத்தில் உரிய நிகழ்ச்சி தொடர்பாகப் பிரச்சினைகள் காணப்படின், பரிசீலனையின்பின் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும். போட்டி நடைபெறும்போது போட்டியாளர்களோ, பொறுப்பாசிரியர்களோ நடுவர்களுடன் கலந்தாலோசிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் போட்டி நிகழ்வுகள் தொடர்பான ஆலோசனை காணப்படின் பிரதான போட்டி ஏற்பாட்டுக் குழுவிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4.6 போட்டி நிகழ்ச்சியின்போது போட்டி தொடர்பான விதிமுறைகள் மீறப்பட்டுள்ளமை தகுந்த ஆதாரங்கள் மூலம் நிரூபணமாயின் பரிசீலனை மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏதெனும் ஒரு போட்டி முடிவு அறிவித்த பிறகு அதிகப் புள்ளியீட்டிய பாடசாலைக்கு எதிராகப் புகார்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் புகாரின் தன்மையினைப் பொறுத்துப் அப்பாடசாலை முடிவு நீக்கப்படின் அடுத்ததாக அதிக புள்ளிகள் பெற்ற பாடசாலை பிரதான இடத்திற்கு வரக்கூடியதாக முடிவு எடுக்கப்படும்.

4.7 பாடத் துறையில் தேர்ச்சி பெற்ற, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களே நடுவர்களாக நியமிக்கப்படுவர். நடுவர்களைக் குறித்த போட்டிகள் நடத்துவதற்கு முன்பாகவே தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அன்றைய தினம் வருகைதரும் ஆசிரியர்களை உடனடியாகப் போட்டி நடுவராக அமர்த்துதல் கட்டாயமாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

4.8 தனி, குழுப் போட்டிகளுக்கு 3 நடன ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டும். திறந்த போட்டிகளுக்கு ஒரு நாடக ஆசிரியர் உட்பட ஐவர் நடுவர்களாகக் கடமையாற்ற வேண்டும். நாட்டிய நாடகப் போட்டிகளுக்கு மாணவர்களை அனுப்பிய அனுபவம் உள்ள ஆசிரியர்கள் மாத்திரமே போட்டி நடுவர்களாகப் பங்குபற்றுவதற்குத் தகுதி உடையவராவர்.

**05 போட்டியில் பங்குபற்றல்**

5.1 தமது கல்வி வலயப் பாடசாலைகளை இப்போட்டியில் பங்குபற்றச் செய்வது அந்தந்தக் கல்வி வலயங்களின் அழகியல் பாடப் பணிப்பாளரதும், அதிபரினதும் பொறுப்பாகும்.

5.2 போட்டிக்கு விண்ணப்பிப்போர் இச்சுற்று நிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கமைவாகத் தயாரித்து விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தும்போது தட்டச்சு அன்றேல் தெளிவான பெரிய ஆங்கில எழுத்துக்களால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறே வேறு பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் பக்கவாத்தியத்திற்குப் பங்குபற்றுவதாயின் மேற்குறிப்பிட்ட மாதிரியையே பயன்படுத்துதல் வேண்டும். ஒரு பாடசாலை ஒன்றிற்கு மேற்பட்ட போட்டிகளில் பங்குபற்றும்போது, ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். பெயர் விபரங்கள் கையால் எழுதப்படும்போது ஆசிரியரினதோ, மாணவரினதோ பெயருக்கு முன்னால் செல்வன்/செல்வி/திரு/திருமதி ஆகிய தலைப்புக்கள் இடம்பெறுதல் வேண்டும்.

இப்போட்டிகளில் பங்குபற்றும் சகல போட்டியளர்கள் மற்றும் ஏனைய பிரிவினர் போட்டியில் சகல சந்தர்ப்பங்களிலும் இப்போட்டிக்கான சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சட்ட விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும். அகில இலங்கை ரீதியில் இறுதிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பாடசாலை தொடர்பாக வழங்கப்படும் நேர அட்டவணையில் இணைக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து, விளங்கி உரிய இடத்தில் அதிபரால் கையொப்பமிட்டுப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்.

இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள், கட்டுப்பாடுகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரியவருமிடத்துப் பெறுபேறுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து குறிப்பிட்ட பாடசாலையின் பெயர் நீக்கப்படுவதோடு, காலம் தாழ்த்திய நிலையிலும் ஒழுக்காற்று நடவடிக்கை உட்பட வேறு முடிவுகளையும் எடுப்பதற்குக் கல்வி அமைச்சிற்கு அதிகாரம் உண்டு.

**3. ஒழுக்கம் மற்றும் பொறுப்புக்கூறல்**

1.1. சகல போட்டிச் சந்தர்ப்பங்களிலும் பங்குபற்றுவதற்காகப் போட்டி நிலையங்களுக்கு மற்றும் தங்குமிடங்களுக்கு வருகைத்தரும் மாணவர்களின் ஒழுக்கம், நடத்தைகள், பாதுகாப்பு மற்றும் பெறுப்பேற்றல் தொடர்பான பொறுப்புக்கள் அதிபர் உட்பட குழுவின் பொறுப்பாசிரியர்களையே சாரும்.

1.2. மாணவிகளுக்குப் பொறுப்பாசிரியைகளும், மாணவர்களுக்குப் பொறுப்பாசிரியர்களும் இருபாலாருக்கும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் பொறுப்பேற்றுப் பாதுகாப்பளிக்க வேண்டும்.

1.3. போட்டி நடைபெறும் சூழலில் போட்டியாளரின் முழுப்பொறுப்பும் பொறுப்பாசிரியருக்கு உரித்துடையதாகும். போட்டிச் சூழலில் பெற்றோர் மற்றும் ஏனையோர் பங்குபற்றல் தவிர்க்கப்பட்டுள்ளது. அதற்கான முழு வகைகூறலும் அதிபரையே சாரும்.

1.4. இப்போட்டியின் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பாடசாலையின் ஒழுக்கத்தை மீறும் வகையில் சம்பவங்கள் இடம்பெறின் அப்பாடசாலையின் அதிபர், வலயக் கல்விப்பணிப்பாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பதில் நியமிக்கப்பட்டுள்ள கல்விப் பணிப்பாளர் (அழகியல்), கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள பரத நாட்டியத்திற்குப் பொறுப்பான அதிகாரி பங்கேற்று நடவடிக்கை மேற்கொள்வர். இது தொடர்பாகப் பாடசாலையில் இருந்து வேறு நபர்களின் தலையீடு ஏற்படின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

1.5. பாடசாலையினால் போட்டி தொடர்பாகப் புகார்கள் அளிக்கப்படும் பட்சத்தில் உரிய அதிகாரிகள் தகுந்த முறையில் பாராபட்சமின்றிய விசாரணைகளை மேற்கொண்டு பதிலளித்தல் அவசியமாகும். சுற்று நிருபத்தை மீறும் பட்சத்தில் வகைகூறலுக்கு உட்படுத்தப்பட்ட அதிகாரிகளின் பெயரில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1.6. போட்டி நிகழ்விற்குப் பங்கேற்கும் மாணவர், ஆசிரியர், கல்வியலாளர்கள், நடுவர்கள், இணைப்பாளர்கள் மற்றும் அனைவரும் கல்வி நிறுவனங்களின் ஆளுமை மற்றும் கௌரவத்திற்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நடப்பார்களாயின் அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- போட்டிக்கான நிகழ்ச்சிகள் அழகியற் கல்விப் பணிப்பாளரினால் சுற்று நிருபத்துடன் இணைத்து அளிக்கப்படும்.

இப்போட்டியில் சமூகமளிக்கும் சகல போட்டியாளர்கள் மற்றும் அனைவரும் போட்டியின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுற்று நிருபத்தை நன்கு விளங்கிச், சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். நடுவர்களின் தீர்ப்பை இறுதித் தீர்ப்பாகும். போட்டி விதிமுறைகளை மீறும் பட்சத்தில் அல்லது போட்டி முடிவுகளை மாற்றும் பட்சத்தில் கல்வி அமைச்சினூடாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

**அகில இலங்கைப் பரத நாட்டியப் போட்டி - 2024**

**சுற்று நிருப இணைப்பு**

| **இல** | **பிரிவுகள்** | **ஆண்/ பெண்** | **தனி /குழு** | **செந்நெறி நடனம்** | **நேரம்** | **இல** | **கிராமியம்** | **நேரம்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | **கீழ்ப் பிரிவு** | ஆண் | தனி | ‘‘பவனி வாறார் பாருங்கோள்…..’’ தத்துவலிங்கன் கீர்த்தனைகள் | 3-4 நிமி | | | |
| | | | குழு | | | 02 | கொற்றவை ஆடல் | 4-5 நிமி |
| 03 | | பெண் | தனி | ‘‘கழல்பாட எழில் நல்கும்’’ பிரம்மஸ்ரீ.ந.வீரமணி ஐயர் | 3-4 நிமி | | | |
| 04 | | | குழு | புத்தாக்க நடனம் - ‘‘உயிர்களை நேசிப்போம்’’ | 4-5 நிமி | 05 | குரவையாடல் | 5-7 நிமி |
| | | கலப்பு | | | | 06 | மீனவ நடனம் | 5-7 நிமி |
| 07 | **சிரேஷ்ட பிரிவு 01** | ஆண் | தனி | ‘‘எழுச்சி கொள் மனமே’’ – பெரும் கவிக்கோ கீர்த்தனைகள் | 4-6 நிமி | | | |
| | | | குழு | | | 08 | மல்லாடல் | 4-6 நிமி |
| 09 | | பெண் | தனி | ‘‘சொல்ல வல்லாயோ’’ – கிளிவிடு தூது, பாரதியார் பாடல் | 5-7 நிமி | | | |
| 10 | | | குழு | கொடுகொட்டி ஆடல் - | 5-6 நிமி | 11 | உலக்கை நடனம் | 5-7 நிமி |
| | | கலப்பு | | | | 12 | தப்பாட்டம் | 5-7 நிமி |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | | ஆண் | தனி | ‘‘எடடா எடு யாழை’’<br>சில்லையூர் செல்வராசன் கவிதைகள் | 5-6 நிமி | | | |
| | | | குழு | | | 14 | பொய்க்கால் ஆட்டம் (பொய்க் காலின் உயரம் 3அடி) | 4-6 நிமி |
| 15 | | பெண் | தனி | ‘‘ஆண் பெண் நிகர்’’<br>பாரதிதாசன் கவிதைகள் | 4-5 நிமி | | | |
| 16 | | | குழு | புத்தாக்க நடனம் -<br>‘‘உனக்குச் சொல்கிறேன்’’ | 8-10 நிமி | 17 | குடக் கூத்து | 5-7 நிமி |
| 18 | | | கலப்பு | ‘‘நாளை நமதே’’ – புத்தாக்கம் | 6-8 நிமி | | . | |
| 19 | **திறந்த போட்டி** | குழு | | நாட்டிய நாடகம்- ‘‘வேலுநாச்சியார்’’<br>அல்லது<br>‘‘நான் பெண்ணாகப் பிறந்தது குற்றமெனில்…’’ | 20-25 நிமி | | | |

**இணைப்பு**

**கீழ்ப் பிரிவு 1 – ஆண் தனி**

**பவனி வாறார் பாருங்கோள் …….**

**எடுப்பு**

பவனி வாறார் பாருங்கோள் - இதோ அந்திப்

பவனி வாறார் பாருங்கோள் (பவனி)

**தொடுப்பு**

பவனி வாறார் இதோ பாருங்கோள் வாருங்கோள்

புவனியோர் பணியப் பொய்யாத மொழி நாதர்

(பவனி)

**முடிப்பு**

மாதர முன்னே நடக்க – வேதாகமம்

ஆதிதேவர் படிக்க

கோதிலால வட்டம்

குடைபோல் குடைபிடிக்கக்

கும்பிட்டோர் வினையைக்

கூடாமலே அடிக்கப் (பவனி)

**கீழ்ப் பிரிவு 1 –பெண் தனி**

**"கழல்பாட எழில் நல்கும்"**

**பிரம்மஸ்ரீ.ந.வீரமணி ஐயர்**

**இராகம் - கௌரிமனோஹரி**

**தாளம் - ஆதி**

**பல்லவி**

கழல்பாட எழில் நல்கும் தாயே கண்ணகி

பொழில் சூழும் வற்றாப்பளை

பொலிந்தமரும் மாயே

**அனுபல்லவி**

அழல்மானும் துடியேந்தும்
அம்பலவன் தேவி
பழம் நல்கி கணபதிக்குப்
பரிந்தருளும் நீலி

**சரணம்**

கற்றார் புகழ்ந் தேத்தும் கௌரிமனோஹரி
வற்றாப் பளை அன்னை வராகிலோகேஸ்வரி
உற்றாரும் பெற்றாரும் உறவும் நீயே ஆதரி
நற்றா மரைப்பதம் நல்கும் கண்ணகி நீகதி

**சிரேஷ்ட பிரிவு 1 ஆண் தனி**

**எழுச்சிகொள் மனமே – பெருங்கவிக்கோ கீர்த்தனைகள்**

**எடுப்பு**

அஞ்சாமை கொள் மனமே – ஓங்கும்
அறநெறி வழியில் (அஞ்சாமை)

**தொடுப்பு**

துஞ்சாமை என்னும் சுடர்நலம் போற்று
தூய நல் வினையாம் செயல்மனம் ஏற்று (அஞ்சாமை)

**முடிப்பு**

அயர்விலா துழைக்கும் ஆண்மையே வீரம்
அணுப்பொழுதும் சோரா மேன்மையே தீரம்
வயப்படும் வழிதனில் வெல்வதே வீரம்
வாய்மையால் வென்று நிலைப்பதே தீரம் (அஞ்சாமை)

மலைபோல் துயர் கண்டு மலைக்காதே – எந்த
வஞ்சகம் மோதினும் சளைக்காதே
அலை ஓய்ந்து நீராடக் காத்திருக்காதே
ஆர்வத் தெழுச்சியால் சீரார் நலம் தேட (அஞ்சாமை)

**சிரேஷ்ட பிரிவு 1 பெண் தனி**

**கிளிவிடு தூது**

**பாரதியார் பாடல்**

**பல்லவி**

சொல்ல வல்லாயோ? – கிளியே

சொல்ல நீ வல்லாயோ?

**அனுபல்லவி**

வல்ல வேல்முரு கன்தனை - இங்கு

வந்து கலந்து மகிழ்ந்து குலாவென்று

**சரணங்கள்**

தில்லை யம் பலத்தே – நடனம்

செய்யும் அமரர்பிரான் - அவன்

செல்வத் திருமகனை - இங்குவந்து

சேர்ந்து கலந்து மகிழ்ந்திடு வா யென்று (சொல்ல)

அல்லிக் குளத்தருகே – ஒரு நாள்

அந்திப் பொழுதினிலே –அங்கோர்

முல்லைச் செடியதன்பாற் - செய்த வினை

முற்றும் மறந்திடக் கற்றதென்னேயென்று (சொல்ல)

பாலை வனத்திடையே – தன்னைக் கைப்

பற்றி நடக்கையிலே- தன் கை

வேலின் மிசையாணை வைத்துச் சொன்ன

விந்தை மொழிகளைச் சிந்தை செய்வாயென்று (சொல்ல)

**(சரணத்தில் ஏதாவது இரண்டு போதுமானது)**

**சிரேஷ்ட பிரிவு 2 ஆண் - தனி**

**எடுப்பு**

எடடா எடு யாழை

எங்கள் இலங்கையின் பங்கயத்தாள் தொழ (எடடா)

**சரணங்கள்**

ஈசனை வீணையின் இசைநலத்தால் மயக்

கெய்திடச் செய்த நல் ராவண மன்னவன்

தேசம் ஈதென்பது தேர்ந்திடு மாறு யாழ்ச்

சின்னம் திகழும் கொடி மன்னிய மாநிலம் (எடடா)

முந்தைக் குவேனியாம் மொய்குழலாறிடம்

மூது கடல் கடந் தாதியில் வந்திவன்

சிந்தை இழந் துளம் சேர்ந்த மா விசயனும்

சேயிழையாளும் ஒன் றாகிய தாய்நிலம் (எடடா)

தோற்றனன் போரிலோர் வேற்றவன் ஆயினும்

தோத்திரித்தே அவன் கீர்த்தியைப் போற்றிட

மாற்றவன் பேரிலோர் மண்டபம் நாட்டிய

மாமகன் கைமுனுக் கோமகன் பூமியே (எடடா)

**சிரேஷ்ட பிரிவு 2 பெண் - தனி**

ஆண்உயர் வென்பதும் பெண்உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை
வாணிகம் செய்யலாம் பெண்கள் நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள் (ஆணுயர் வென்பதும்)

ஏணை அசைத்தலும் கூடும்
யார் அசைத்தாலுமே ஆடும்
வீணை மிழற்றலும் கூடும்
மெல்லியின் விரலுக்கா வாடும்
நாணமும் அச்சமும் வேண்டும்
ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும் (ஆணுயர் வென்பதும்)

**கல்விப் பணிப்பாளர் (அழகியற் பிரிவு)**
**செயலாளருக்காக**
**கல்வி அமைச்சு**